செ.வெ.எண்.51 நாள்: 19.12.2020

**தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு ஒன்றியம் முடுக்குமீண்டான்பட்டி ஊராட்சியில் ஆக்டிவ் மைண்ட்ஸ் மனநல காப்பகத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் திருச்செந்தூர், தூத்துக்குடி பகுதியில் இருந்து மீட்கப்பட்ட பெண்களை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு ஒன்றியம் முடுக்குமீண்டான்பட்டி ஊராட்சியில் சமூக நலத்துறை கட்டிடத்தில் ஆக்டிவ் மைண்ட்ஸ் மனநல காப்பகம் இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் திருச்செந்தூர், தூத்துக்குடி பகுதியில் இருந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 15க்கும் மேற்பட்ட பெண்கள் மீட்கப்பட்டு இக்காப்பகத்தில் வைத்து உணவளித்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று இன்று (19.12.2020) பார்வையிட்டனர். அப்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள், மனநலம் குன்றிய மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபொழுது 2011-2016 ஆட்சிக்காலத்தில் இந்த காப்பகம் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி தொகுதி முடுக்குமீண்டான்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காப்பகம் மூலம் ஆதரவற்றவர்களுக்கு, வயதானவர்களை காப்பதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆக்டிவ் மைன்ட்ஸ் தொண்டு நிறுவனம் இதை சிறப்பாக பராமரித்து வருகிறது. இந்த நேரத்தில் நமது மாவட்ட ஆட்சித்தலைவர் புதிதாக பதவியேற்றவுடன் திருச்செந்தூர் மற்றும் தூத்துக்குடி பகுதியில் சாலையோர பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்டு கேட்பாரற்று ஆதரவில்லாமல் இருந்தவர்களை மீட்கப்பட்டு இந்த காப்பகத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளார்கள். இதுபோன்று சாலை பகுதிகளில் மனநலம் பாதிக்கப்பட்டு கேட்பாரற்று ஆதரவில்லாமல் இருப்பவர்களை மீட்டு அவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசு இதுபோன்ற காப்பகங்களை அமைத்து பாதுகாத்து வருகிறது என தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முடுக்குமீண்டான்பட்டியில் செயல்பட்டு வரும் மனநல காப்பகம் இன்று ஆய்வு செய்யப்பட்டது. சமீபத்தில் புயல் மழை சமயங்களில் ஆதரவற்றவர்கள், மனநலம் குன்றியவர்கள், கேட்பார் அற்றவர்கள் தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூர் கோவில் மற்றும் சர்ச் பகுதிகளிலும் இருப்பதை கண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் இரவு நேரங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 15க்கும் மேற்பட்டவர்கள் கண்டறியப்பட்டு இங்கே கொண்டு வரப்பட்டு ஆக்டிவ் மைன்ட்ஸ் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். பெண்களுக்கான காப்பகம் இங்கே உள்ளது. ஆண்களுக்கான காப்பகம் எட்டயபுரம் செமப்புதூரிலும் உள்ளது. பெண்கள் இங்கும், செமப்புதூரில் ஆண்களும் தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். பெண்கள் காப்பகத்தில் 36 நபர்களும், ஆண்கள் காப்பகத்தில்

32 நபர்களும் உள்ளார்கள். முடுக்குமீண்டான்பட்டி காப்பகத்தில் ஆக்டிவ் மைன்ட்ஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம் அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மனநலத்திற்கு தேவையான மருந்து, மாத்திரைகளும் வழங்கப்படுகிறது. இதற்கு தனியாக பதிவேடுகளும் பராமரிக்கப்டுகிறது. காவல் துறையில் தகவல் தெரிவிக்கப்பட்டு யாரேனும் காணவில்லை என்று வந்தால் அவர்களின் உறவினர்களிடம் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த காப்பகத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியுடன் அவர்கள் மீண்டும் தங்களது சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கு அவர்கள் சொந்த கிராமத்தை கண்டறிந்து அங்கு அவர்கள் உறவினருடன் சேர்த்து வைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இவர்களை குணப்படுத்தி சமுதாயத்துடன் இணைந்து வாழ வைப்பதே இதன் நோக்கம் ஆகும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.சத்யா, கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.மணிகண்டன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம், ஆக்டிவ் மைன்ட்ஸ் தொண்டு நிறுவன செயலாளர் திரு.தேன்ராஜ், மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் திரு.ராமச்சந்திரன், திரு.குருராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.